දුරකථන:
தொலைபேசி
Telephone:

සභාපති
தலைவர்
Chairman: (+94) 011 2556840

ලේකම්
செயலாளர்:
Secretary: (+94) 011 2556831

කාර්යාලය
காரியாலயம்
Office: (+94) 0112556834
0113071324

ෆැක්ස්:
தொ.நகல
Fax (+94) 011 2556836
011 2556837

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்:
e-mail fincom@sltnet.lk


# මුදල් කොමිෂන් සභාව

( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154'ජ' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)

# நிதி ஆணைக்குழு

(அரசியலமைப்பின் 154`எ ஆம்உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)

# FINANCE COMMISSION

(Established under Article 154 R of the Constitution)


48, වජිර පාර,
කොළඹ 04.

48, வஜிரா வீதி,
கொழும்பு-04, இலங்கை.

48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.


මගේ අංක
எனது இல:
My No FC/3/3/2014

ඔබේ අංක
உமது இல:
Your No

දිනය
திகதி:
Date: 2014.12.31

தமிழாக்கம்

பிரதம செயலாளர்,
மேல் /மத்திய/தென் / வடக்கு/ கிழக்கு/வட மேல் / வட மத்திய/ஊவா/ சப்பிரகமூவ/ மாகாணம்

அன்புக்குரிய பிரதம செயலாளர்,

**<u>மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை-பிரமாண அளவை அடிப்படையாகக் கொண்ட கொடை –மற்றும் விசேட திட்டங்களின் கீழ் வருடாந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற் படுத்தும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்</u>**

மேலேயுள்ள தலைப்பின் கீழ் FC/PRP/C/2011 என்னும் எனது இலக்கத்தையும் மற்றும் 2011.07.26 திகதியையும் கொண்ட கடிதமுலம் உங்களுக்கு அனுப்பபட்ட FC/PSDG & CBG / Circular/ 2011 /1 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை மீள திருத்தப்படுகிறது.

அந்தச் சுற்றறிக்கையில் 6 ஆம் பந்தியின் கீழ் மாகாணங்களால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளில் நிர்வாகச் செலவுகளாக, மதிப்பிடப்பட்ட தொகையில் 5% வீதத்துக்கு மேற்படாமல் மூலதன பகிர்வுகளில் நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும் என காட்டப் பட்டிருந்தது.

அரச தொழில் முயற்சிகள் திணைக்கள( Department of Public Enterprises) பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட PED/POL/CIR/2013-3 என்னும் இலக்கமும் 2013.10.02 திகதியும் கொண்ட சுற்றறிக்கையில் அரசாங்க துறை கணக்கு வைப்பு நடைமுறைகளில், இலங்கை கணக்காளர் நிறுவனத்தில் அரசாங்க துறை கணக்கீட்டு நியம தரங்கள் குழு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பங்களிப்போடு வெளியிடப்பட்ட இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம் முறைகளு( Sri Lanka Public Sector Accounting Standards) க்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. நியம இலக்கம் 7 (SLPSAS 7) ன் கீழ் 31ம் பந்தியில் ( Paragraph 31) f பிரிவில் காட்டப்பட்டுள்ள பிரகாரம், சொத்துக்கள் ,பொறிகள் மற்றும் உபகரணங்கள் (Property,Plant and Equiment) ஆகியவற்றின் செலவுகளில், நிர்வாக மற்றும் அவசியமான மேற்செலவுகள் (Administration and other general overhead costs) உள்ளடக்கக் கூடாது எனக் காட்டப்பட்டுள்ளது. அந்த முறைகளைக் கவனத்தில் கொள்ளும் போது மூலதனச் செலவுகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள பகிர்வுகளில் மீண்டுவரும் செலவு செய்யும் கணக்கீட்டு முறைகளும் நியம தரங்களும் முரண்படும் நடவடிக்கையாக உள்ளது.

நிதி ஆணைக்குழுவின் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் நிர்வாகச் செலவு அடையாளம் காட்டப் பட்டுள்ளது- நிர்மாண திட்டத்தைச் செயற்படுத்தும் போது அதனுள்ளடங்கியதாக அத்தியாவசிய

மீண்டுவரும் செலவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக. ஆனால், மேற் குறிப்பிட்ட கணக்கீட்டு நியம தரங்களுக்கு அமைவாக அந்தச் செலவு கணக்கிடுகையில் பிரச்சினைகள் ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது. ஆகையால், 2015-01-01 முதல் செயற்படும் வண்ணம் மூலதனப் பகிர்வுகளில் நிர்வாகச் செலவுக்கு நிதி ஒதுக்குதல் ரத்து செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றேன்.

2015.01.01 திகதி முதல் எந்த அபிவிருத்தி நடவடிக்கையின் பொருட்டும் மூலதன பகிர்வுகளில் ஏதாவது அல்லது விகிதம் நிர்வாகச் செலவாக ஒதுக்க முடியாதாகையால், அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக நிர்வாக செலவு மேற்கொள்வது மேலும் அவசியமானால், அதன் பொருட்டு மீண்டு வரும் செலவுகளின் கீழ் தொடர்பான செலவுத்தலைப்பு அடங்கலாக ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும்படி, அது போன்ற சந்தர்ப்பங்களில் அந்த நிதியில்மேற்கொள்ளக் கூடிய மீண்டுவரும் செலவு மட்டும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

(கையொப்பம்) டபிள்யு.எச்.முனசிங்க
செயலாளர்
நிதி ஆணைக்குழு

பிரதிகள்:

1. பிரதிப் பிரதம செயலாளர் (திட்மிடல்) அவசிய நடவடிக்கைக்காக
2. பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) அவசிய நடவடிக்கைக்காக
3. உதவிக் கணக்காய்வாய்வாளர். அவசிய நடவடிக்கைக்காக